# ‘கீழடி தமிழர் தாய்மடி’ என்ற முழக்கத்துடன் புறநானூற்று வீரர்கள் போல் பல்லாயிரவர் திரண்ட ஆர்ப்பாட்டம்!



## கீழடி அகழாய்வு: ஒன்றிய அரசைக் கண்டித்து – மதுரையில்

# கழக மாணவர் அணியினர் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் இரா.இராஜீவ்காந்தி தலைமையில் – திருச்சி சிவா எம்.பி. உணர்ச்சிமிகு உரை!

**மதுரை, ஜூன் 20 –**

**கீழடி அகழாய்வு அறிக்கையை ஏற்க மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாநில அளவிலான கண்டன ஆர்ப்பாட்டம் மதுரை விரகனூர் சுற்றுச்சாலையில் நேற்று முன்தினம் (18.6.2025) நடைபெற்றது. மாநில மாணவர் அணிச் செயலாளர் இரா.இராஜீவ் காந்தி ஒருங்கிணைந்த இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் இருந்து தி.மு.க. மாணவர் அணி நிர்வாகிகள், மதுரை மண்டல மாவட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.**

இந்த ஆர்ப்பாட்டக் கூட்டத்தில், கழகத் துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா எம்.பி. அவர்கள் கண்டன உரையாற்றினார். மாநிலத் துணைச் செயலாளர்கள் ஆர்ப்பாட்டத்தின் நோக்கம் குறித்து உரையாற்றினர். மதுரை தெற்கு மாவட்ட அமைப்பாளர் பாண்டிமுருகன், மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளர் ஆதிசங்கர் வரவேற்புரை ஆற்றினர். மதுரை மாநகர் மாவட்ட அமைப்பாளர் அன்பு நன்றியுரை ஆற்றினார்.

தமிழர், கீழடியின் தொன்மங்கள் மற்றும் ஒன்றிய அரசுக்கு எதிரான பாடல்களைக் கோவன் குழுவினர் பாடினர்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மதுரை மண்டலத்தைச் சேர்ந்த கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, விருதுநகர், ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து மாணவர் அணி நிர்வாகிகள் மற்றும் மாணவர்கள் எனக் கிட்டத்தட்ட 15,000-க்கும் மேற்பட்டோர் கழகத் தலைவர் அவர்களின் முகம் தாங்கிய முகமூடி அணிந்து பங்கேற்றனர்.

கீழடியின் தொன்மை குறித்தும், ஒன்றிய அரசுக்கு எதிராகவும், கீழடி அகழாய்வு அறிக்கையை ஒன்றிய அரசு ஏற்றுக்கொள்ள வலியுறுத்தியும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. கீழடியின் தொன்மத்தை ஏற்க மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து கழகத் தலைவரின் பதிவை மாணவர் அணிச் செயலாளர் ராஜீவ்காந்தி உறுதிமொழியாக வாசிக்க அதை ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர் வழிமொழிந்து ஏற்றுக்கொண்டனர்.

காலை 10 மணிக்குத் தொடங்கிய ஆர்ப்பாட்டம் பிற்பகல் 12 மணிக்கு நிறைவடைந்தது

கீழடி அகழாய்வு அறிக்கையில் போதுமான ஆய்வுத் தகவல்கள் இல்லை. அதனை ஏற்க கூடுதல் ஆய்வுகள் தேவை என்றும் ஒரே ஒரு கண்டுபிடிப்பு மட்டும் எல்லாவற்றையும் மாற்றிவிடாது என மத்திய கலாசார மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியது சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது. இதைக் கண்டித்து தமிழ்நாடு நிதி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு உடனடியாக தலில் அவர்கள் கீழடியில் ஒன்றுமே இல்லை என்றார்கள். அடுத்து ஆய்வதிகாரியை இடம் மாற்றினார்கள். அப்புறம் இனிமேல் நிதியே ஒதுக்க மாட்டோம் என்றார்கள். கடைசியாக, சமர்ப்பித்த அறிக்கையை இரண்டாண்டுகள் கிடப்பில் போட்டார்கள். இப்போது வந்து ஆதாரம் போதவில்லை என்கிறார்கள்” எனப் பதிலடி கொடுத்தார்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க கீழடி அகழ்வாராய்ச்சி குறித்து அறிவியல் பூர்வமாக பல்வேறு ஆதாரங்களை எடுத்து வைத்தும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு அறிக்கை வெளியிடாததைக் கண்டித்தும் மாணவரணி சார்பில் மதுரை விரகனூர் பகுதியில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்பாட்டத்தில் மாநில மாணவரணிச் செயலாளர் இரா.ராஜீவ் காந்தி தலைமையில் கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி என்.சிவா எம்.பி. கண்டன உரையாற்றி, உறுதிமொழியேற்றார். உடன் மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி எம்.எல்.ஏ., சேடபட்டி மு.மணிமாறன், தங்கதமிழ்செல்வன் எம்.பி., மாநில நிர்வாகிகள் பொன்.முத்துராமலிங்கம், வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, ஜி.பி.ராஜா, இள.மகிழன், மாநில மாணவரணி துணைச் செயலாளர்கள் அதலை பி.செந்தில்குமார், பூர்ண சங்கீதா, மன்னை சோழ ராஜன், தமிழரசன், பி.எம்.ஆனந்த், கோகுல், வீரமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழரசி, ஆ.வெங்கடேசன், செல்வகுமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர்கள், ஆதிசங்கர், துரை கோபால்சாமி (எ) அன்பு, பாண்டி முருகன் மற்றும் பல்லாயிரக்கணக்கான மாணவரணி நிர்வாகிகள், மாணவ–மாணவியினர், கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

தி.மு.க மாணவர் அணி மத்திய அமைச்சரின் இந்தப் போக்கைக் கண்டித்து மதுரை விரகனூர் சுற்றுச்சாலையில் மாநில அளவிலான கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவிப்பு வெளியிட்டது. இதற்குப் பல்வேறு தரப்பிலிருந்தும் ஆதரவுகள் பெருகின. முதல்வர் மு.க. ஸ்டாலினும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சி நிர்வாகிகள் பங்கேற்க வேண்டுமென அழைப்பு விடுத்தார். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினும் தென்மாவட்டச் சுற்றுப்பயணத்தின் போது சார்பு அணி நிர்வாகிகளு டான ஆலோசனைக் கூட்டத்தில் மத்திய அரசுக்கு எதிராக நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க வேண்டுமென அறிவுறுத்தியிருக்கிறார்.

இன்று காலையில் மதுரை விரகனூர் சுற்றுச்சாலை யில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தை மதுரை மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்கள் பாண்டிமுருகன், அன்பு, ஆதிசங்கர் ஆகியோர் ஒருங்கிணைத்தனர். இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் இருந்து திமுக மாணவர் அணி நிர்வாகிகள், மதுரை மண்டலத்தையொட்டி மாவட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டக் கூட்டத்தில், கழகத் துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா எம்.பி. கண்டன உரையாற்றினார். மாநிலத் துணைச் செயலாளர்கள் ஆர்ப்பட்டத்தின் நோக்கம் குறித்து உரையாற்றினர்.

### இரா.இராஜீவ்காந்தி பேச்சு!

கீழடியின் தொன்மை குறித்தும், ஒன்றிய அரசுக்கு எதிராகவும், கீழடி அகழாய்வு அறிக்கையை ஒன்றிய அரசு ஏற்றுக்கொள்ள வலியுறுத்தியும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. கீழடியின் தொன்மத்தை ஏற்க மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து முதல்வர் ஸ்டாலின் “எத்தனை எத்தனை தடைகள் நம் தமிழினத்துக்கு? அத்தனையையும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக எதிர்த்துப் போராடி, அறிவியல் துணைக்கொண்டு நம் இனத்தின் தொன்மையை நிறுவி வருகிறோம்! இருந்தும் ஏற்க மறுக்கின்றன சில மனங்கள். திருத்த வேண்டியது அறிக்கைகளை அல்ல; சில உள்ளங்களை! ஒன்றிய அரசுக்கு நமது தமிழ்நாட்டின் உணர்வை வெளிப்படுத்துவோம்!”; அவர்களைத் திருத்து வோம்!” என ஆர்ப்பாட்டத்தையொட்டி பதிவிட்டிருந்ததைத் மாணவர் அணிச் செயலாளர் ராஜீவ்காந்தி உறுதிமொழியாக வாசிக்க அதை ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் அதை வழிமொழிந்து ஏற்றுக்கொண்டனர்.

மேலும் அவர் பேசியபோது, அன்னை தமிழ் மீது இந்தி திணிக்கப்பட்டபோது நம் மூன்னோர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து இந்தி ஆதிக்கத்தை ஒழித்தோம். தமிழ் வென்றது, தமிழ்நாட்டை மீட்டோம். அந்த தொல் தமிழர் வரலாற்றை நொறுக்குவதற்கு பாசிச மோடி கும்பல் கங்கணம் கட்டி வருகிறது. தமிழகத்தை முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆண்டுகொண்டிருக்கிறார். அவர் கரத்தை வலுபடுத்துவோம். அடிமை எடப்பாடியும், ஆமைகளும், தற்குறிகளும், ஆடு களும் இந்த மண்ணில் வரும்பொழுது நாங்கள் உரக்கச் சொல்லுவோம், கீழடி தமிழர் தாய் மடி. எங்கள் தாய்மடியை மீட்கும் போராட்டத்தில் கருப்பு சிவப்பு படை எப்போதும் நிற்கும். இந்தி மீது பாரதிதாசன் எழுதிய கவிதைகள், எதிர்ப்புப் பாட்டுகள், எடுத்துக்காட்டுகள்:

“இந்திக்கு ஆதிக்கமா? இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம் - நீங்கள். எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!”

“செந்தமிழ்க்குத் தீமை வந்தபின்னும் - இந்தத். தேகமிருந்தொரு லாப முண்டோ?”

“விந்தைத் தமிழ்மொழி எங்கள் மொழி - அது. வீரத் தமிழ்மக்கள் ஆவி என்போம்.”

“இந்திக்குச் சலுகை தந்திடுவார் - அந்த. ஈனரைக் காறி யுமிழ்ந்திடுவோம்!”

“இப்புவி தோன்றிய நாள் முதலாய் - எங்கள். இன்பத் தமிழ்மொழி உண்டு கண்டீர்!”

“தப்பிழைத் தாரிங்கு வாழ்ந்ததில்லை - இந்தத். தான்றோன்றி கட்கென்ன ஆணவமோ!”

“எப்பக்கம் வந்து புகுந்துவிடும் - இந்தி.”

“இந்தி எதிர்த்திட வாரீர்” மாணவர் அணியின் படை இளைஞர் அணியின் உதய் அண்ணாவின் கை பிடித்து நாங்கள் வென்று காட்டுவோம். கீழடி காப்போம்.” என எழுச்சியாக உரையாற்றினார்.

### திருச்சி சிவா பேச்சு!

கண்டன உரையாற்றிய திருச்சி சிவா எம்.பி., “கீழடி தமிழர் தாய்மடி என்று உணர்ச்சி பெருக்கோடு தமிழகத்தில் உள்ள மாணவர்கள் அனைவரும் ஒன்று திரண்டு தமிழ்நாட்டு பண்பாட்டு தலைநகரான மதுரையில் ஆயிரக்கணக்கில் கூடி எச்சரிக்கை மணி ஒலிப்பதற்காக வந்துள்ளார்கள். இந்திய விடுதலை போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம் என எதுவாக இருந்தாலும் அதை முன்னெடுத்து வெற்றியின் முனைக்கு எடுத்துச்செல்லும் பெருமை மாணவர் படைக்கு உண்டு. இந்த மதுரையே திகைக்கும் வகையில் இந்த திடல் நிரம்பி வழிகிறது.

கீழடி ஆராய்ச்சியில் கிட்டத்தட்ட 17 ஆயிரத்து 914 சங்ககால பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. இந்திய நாட்டின் வரலாற்றில் ஹரப்பா கலாசாரம் தான் மூத்த கலாச்சாரம் என கூறப்பட்டது.

1921ம் ஆண்டுதான் அது கண்டுபிடித்து சொல்லப்பட்டது. ஆனால் அதற்கு முன்னரே 1906ம் ஆண்டும் ஆதிச்சநல்லூர் தூத்துக்குடி அருகே செய்யப்பட்ட அகழ்வாராய்ச்சியில் கிடைத்த பொருட்கள் சங்ககாலத்தின் வரலாற்றின் மிகப்பெரிய ஆதாரங்கள் அவை. வடக்கே உள்ளவர்கள் சொல்வது நம்பிக்கையின் அடிப்படையில், தமிழ்நாட்டில் உள்ளவர்கள் சொல்வது ஆதாரங்களின் அடிப்படையில் என்கிறபோது ஏன் அதனை ஏற்க மறுக்கிறீர்கள். சிந்து வெளி நாகரீகத்தை சரஸ்வதி நாகரீகம் என பெயர் மாற்ற முயல்கிறார்கள். அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் 2 ஆயிரம் கோடி. சரஸ்வதி என்பது ஒரு நதியின் பெயர், அது இருந்ததற்கான சுவடு கூட கிடையாது. புராணங்களில் மட்டுமே சொல்லக்கூடிய சரஸ்வதி நாகரீகத்தை புதுப்பிக்க நினைக்கின்றார்கள். சேது கால்வாய் திட்டத்தை 2,500 கோடி ரூபாய் செலவில் இந்திய அரசாங்கத்தை செயல்பட வைத்தது திராவிட கழகம் அதில் அங்கம் வகித்தபோது. அதுமட்டும் அமைந்திருந்தால் இந்தியாவின் பொருளாதாரம் உயர்ந்திருக்கும். ஆனால் அங்கே ராமர் பாலம் உள்ளது என்று சொல்லி அவ்வளவு பெரிய திட்டத்தை நிறுத்தினார்கள்.

உலகத்தின் மூத்த மொழி நம் தாய்மொழி தமிழ் என்று நெஞ்சை நிமிர்த்தி சொல்ல வேண்டிய பொறுப்பு நம்முடையது. வரலாற்றுச் சிறப்புமிக்க நம்முடைய ஆராய்ச்சி என்பது அமர்நாத் என்ற ஆராய்ச்சியாளர் 2015ல் தொடங்கினார். 3 ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களை அவர் ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைத்தார். ஆனால் அவரை டெல்லிக்கு மாற்றிவிட்டு ஸ்ரீராம் என்ற ஒருவரை நியமித்தார்கள். அவர் பெயருக்கு 4 இடங்களில் தோன்றிவிட்டு இங்கு ஒன்னும் இல்லை என்று சொல்லிவிட்டார். சோர்ந்துபோகவில்லை தமிழ்நாடு. தமிழ்நாட்டின் தொல்லியல் துறை அந்த ஆராய்ச்சியை தொடங்கியது. அந்த ஆராய்ச்சிக்கு பின்னர் 40 குழிகள் தோண்டப்பட்டன. கல்லினால் கட்டப்பட்ட வீடுகள், ஓட்டினால் செய்யப்பட்ட கூரைகள், எல்லா வீடுகளிலும் கிணறுகள், கழிவறைகள், பெண்களின் அணிகலன்கள் என பலவும் கிடைத்தன. இரும்பை முதன்முதலில் கண்டு பிடித்தது தமிழர்தான் என்று நிரூபித்துள்ளோம்.

கீழடி போன்ற ஆராய்ச்சி உலகின் எந்த மூலையிலும் நடந்தது இல்லை. இதை ஏற்க ஒன்றிய அரசு மறுக்கிறது.

இந்த போராட்டம் உங்களோடு நிறக கூடாது. உங்கள் சக மாணவர்களுக்கும் கூறுங்கள். இது தூண்டி விடுதல் அல்ல, அனைவரும் ஒன்றாக செயல்படுங்கள். ஒரு அதிகாரியை மாற்றுகிறார்கள் எல்லாம் முடிந்துவிட்டது நினைக்கிறார்கள். நாடாலுமன்ற கூட்டம் நடைபெற உள்ளது. அங்கு சென்று முதலில் கையில் எடுக்க போவது கீழடி பிரச்சினையை தான். நாடாளுமன்றத்தை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். இந்த போராட்டத்தை மக்களிடம் கொண்டுசெல்வதை நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள்.” என எழுச்சியாகப் பேசினார்.

### கோவன் குழுவினர் பாடல்!

மேலும் ஆர்ப்பாட்ட தொடக்கத்தில் தமிழர், கீழடியின் தொன்மங்கள் மற்றும் ஒன்றிய அரசுக்கு எதிரான பாடல்களைக் கோவன் குழுவினர் பாடினர்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் மதுரை மண்டலத்தைச் சேர்ந்த கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, விருதுநகர், ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து மாணவர் அணி நிர்வாகிகள் மற்றும் மாணவர்கள் எனக் கிட்டத்தட்ட 15,000-க்கும் மேற்பட்டோர் கழகத் தலைவர் அவர்களின் முகம் தாங்கிய முகமூடி அணிந்து பங்கேற்றனர்.

காலை 10 மணிக்குத் தொடங்கிய ஆர்ப்பாட்டம் பிற்பகல் 12 மணிக்கு நிறைவடைந்தது.

மதுரை தெற்கு மாவட்ட அமைப்பாளர் பாண்டிமுருகன், மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளர் ஆதிசங்கர் வரவேற்புரை ஆற்றினர். மதுரை மாநகர் மாவட்ட அமைப்பாளர் அன்பு நன்றியுரை ஆற்றினார்.